நிறுவனம் வேலைக்கு எடுத்துக்கொள்கிற நேரத்தில் அந்த பெயர் காத்திருப்போர் பட்டியலிலிருந்து நீக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 536, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

536—

இரட்டைக்குளத்திலிருந்து கால்வாய் வெட்டுதல்

**20733—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், பரங்குன்றாபுரம், வாடியூர், அச்சங்குட்டம், குரிச்சான்பட்டி விவசாயிகளுக்காக இரட்டைக்குளத்திலிருந்து கால்வாய் வெட்டிக் கொடுக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. டி.எம் செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரிய இரட்டைக் குளம் சின்ன இரட்டைக் குளம் மற்றும் இலந்தைக்குளம் ஆகிய குளங்கள், இரட்டைக்குளம் அணைக்கட்டு மூலம் பாசன வசதி பெறுகின்றன. இரட்டைக் குளத்திலிருந்து வரும் நீர் மேற்கண்ட மூன்று குளங்களுக்கும் போதுமானதாக இல்லாத நிலையில் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியக் குளங்களுக்கு இரட்டை குளம் அணைக்கட்டிலிருந்து புதிதாக கால்வாய் வெட்டி நீர் வழங்க சாத்தியமில்லை.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இரட்டைக் குளத்திலிருந்து சாத்தியம் இல்லை என்று சொன்னார்கள். தென்மேற்குப் பருவ மழைக்காலத்தில் அங்கே அந்த கால்வாயிலிருந்து அந்த ஆற்றிலிருந்து வருகின்ற தண்ணீரானது மிக அதிகமாக வரும்போது இந்த குளங்கள் இந்த மானாவாரி குளங்கள் எங்களுடைய பகுதியிலே, பரங்குன்றாபுரம், வாடியூர், அச்சங்குட்டம், குரிச்சான்பட்டி பகுதிகளிலே 10 குளங்கள் இருக்கின்றன. இந்த குளங்களுக்கு எந்த பாசன வசதியும் இல்லாததனால் இந்த இரட்டைக் குளத்திலிருந்து ஒரு கால்வாய், சிறிது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தூரம் தான் இருக்கிறது. 5 கிலோ மீட்டர் அளவில் வெட்டினால் அந்த 10 குளங்களுக்கும் தண்ணீர் வர வாய்ப்பாக இருக்கும். அங்கே போதுமான தண்ணீர், மழை பெய்யும்போது அதிகமான தண்ணீர் உபரி தண்ணீர் வருகின்றது. அந்த மாதிரி சமயங்களிலே இந்த குளங்கள் எல்லாம் நிரம்புவதற்கு வாய்ப்பாக இருப்பதனால் இந்த கால்வாயை வெட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து வெட்டிக் கொடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிற இந்த இரட்டைக் குளம் அணைக்கட்டிற்கு தண்ணீர் வரத்து மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலும், அங்கே ஏற்கனவே இருக்கின்ற பெரிய இரட்டை குளம், சின்ன இரட்டை குளம் மற்றும் இலந்தைக்குளம் ஆகிய குளங்களுக்கு அது போதுமானதாக இல்லை என்ற காரணத்தினாலும், மழை நீர் இருக்கின்ற காலத்திலே இந்த 3 குளங்களுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கிற காரணத்தினாலும் மேலும் இதை விரிவு படுத்துகிறபோது மற்ற குளங்களுக்கு போதுமானதாக பாசன வசதிக்காக நீர் வரத்து இருக்காது என்று கருதுகிற சூழ்நிலையில், இந்த கேள்விக்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 537, திருமதி அ.தி. சரஸ்வதி, இருக்கையில் இல்லை. திரு. பெரியசாமி கேட்கிறார். திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

537—

தாளவாடியில் வணிக வளாகம் கட்டுதல்

35610*—திருமதி அ.தி. சரஸ்வதி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதி, தாளவாடி பகுதியில் வணிக வளாகம் கட்டி வாடகைக்கு விடப்படுமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS